1979 ஏப்ரல் 17]

(முற்பகல் 9-10)

திரு. இரா. அமிர்தராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி ஆலயத்துக்குச் சொந்தமான மின்சார வொயர்கள், காயில்கள், சுவிச்சுகள் ஆகியவை திருடு போயிருப்பது உண்மையா, அதற்கு அங்குள்ளவர்களே உடந்தை என்று கூறப்படுகிறது. அதைப்பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கப்பட்டதா இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைச் தலைவர் அவர்களே, இது தேரிலே உள்ள சிற்ப வேலைப்பாடு அமைந்த மரச் சிற்பங்கள் திருடு போனதைப்பற்றிய கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய தகவல் தருகிறார்கள். விளக்கமாக விவரங்கள் எழுதித் தந்தால் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ராணி மங்கம்மாள் சத்திரம், மதுரை.

*வினா எண். 667— திரு. என். லட்சுமிநாராயணன்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சுற்றுலாப் பயணிகளின் வசதிக்கென மதுரை நகரில் உள்ள ராணி மங்கம்மாள் சத்திரத்தை தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இல்லை.

திரு. என். லட்சுமிநாராயணன்: பேரவைத் தலைவர் அவர்களே அடுத்த ஆண்டு மதுரையில் உலகத் தமிழ் மாநாடு நடைபெறப்போவதாகச் சொல்லப்படுகிறது. தற்பொழுது உள்ள விடுதிகளில் போதுமான படுக்கை வசதிகள் இல்லை, எனவே உடனடியாக படுக்கை வசதிகளை அதிகப்படுத்த ஏதேனும் திட்டங்கள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதனை தனிக் கேள்வியாகப் போட்டால் விவரங்கள் தேவையான அளவிற்கு சேகரித்துத் தரமுடியும். என்றாலும் இதற்கென புதிய விடுதிகளைக் கட்டுவதற்கான முயற்சிகளை அரசு எடுத்துக் கொண்டு வருகிறது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.